

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் அலுவலர்கள் பயன்பாட்டிற்கான வாகனங்களை துவக்கி வைக்கும் விதமாக வாகனத்தின் சாவியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி ஓட்டுநர்களிடம் வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், துணை மேயர் வி.செல்வராஜ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ரெ.சுதீஸ், மண்டலத் தலைவர் சசிகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



நீலகிரி நாடாளுமன்றத் தொகுதி பங்கீடு நிதியிலிருந்து ஐந்து லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பயணியர் நிழற்குடையை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினரும் கழக துணைப்பொதுச்செயலாளருமான ஆ.ராசா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, சிறுமுகை பேரூராட்சி 8வது வார்டு உறுப்பினர் சிறுமுகை ரியாஸ் பா.அருண்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர். சண்முகசுந்தரம், காரமடை கிழக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், கூடலூர் நகரச் செயலாளர், நகராட்சி தலைவர் அறிவரசு, கோவை வடக்கு மாவட்ட அவைத் தலைவர் புருஷோத்தமன், காரமடை நகரச் செயலாளர் வெங்கடேஷ், சிறுமுகை பேரூர்க் கழகச் செயலாளர் உதயக்குமார், இளைஞரணி துணை அமைப்பாளர் விக்கி உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மலேசியாவில் இறந்த தமிழரின் உடல்

# தமிழ்நாடு அரசின் அயலக தமிழர் நலவாரியம் மூலம் மீட்பு!

## தமிழ்நாடு அரசுக்கு உறவினர்கள் நன்றி!

தஞ்சாவூர், செப்.10- திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை பெருக வாழ்ந்தான் பகுதியைச் சேர்ந்தவர் பாலமுருகன். இவர் மலேசியாவில் பணி நிமித்தம் இருந்துவந்தார். அவருக்கு உடல்நலம் குன்றி அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் 24.06.2024 அன்று சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார்.

இந்தநிலையில் பாலமுருகன் இறந்த செய்தி அறிந்த அவரது மனைவி மணிமேகலை மற்றும் அவரது குடும்பத்தார் மிகுந்த வேதனையுற்று, பாலமுருகனின் உடலை சொந்த ஊருக்கு கொண்டுவர வழி தெரியாமல் தவித்து வந்தனர். இந்த தகவலை அறிந்த தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் அண்ணாதுரை எம்.எல்.ஏ. குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி மறைந்த பாலமுருகனின் உடலை சொந்த ஊருக்கு கொண்டுவரும் முயற்சிகளை மேற்கொண்டார்.

மலேசியா தி.மு.க. அயலக அணி பொறுப்பாளர் பெர்தெளஸை தொடர்பு கொண்டு கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் அவர் இந்திய தூதரகம் வழியாக பெறப்பட்ட தகவல்களின்படி, இறந்த பாலமுருகன் மலேசியா பெர்மிட் இல்லாமல் இருந்துள்ளதும் அதோடு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்தபோது இறந்துள்ளார் என்பதும், மருத்துவமனை அதற்கான தொகை மலேசிய ரிங்கிட் 23,000 செலுத்தினால் மட்டுமே அவரின் உடல் கொடுக்கமுடியும் என்று மருத்துவமனை நிர்வாகம் கூறிவிட்டதும் தெரியவந்தது.

ஆனால் இங்கு இறந்த பாலமுருகனின் வயதான அம்மா மற்றும் மனைவி சொந்த வீடு கூட இல்லாத சூழ்நிலையில், தமிழ்நாடு அரசின் அயலக தமிழர் நலவாரியத்தின் மூலமாக அவரின் பூதஉடல் தாயகம் கொண்டு வருவதற்கான உதவிகள் செய்திடுமாறு கோரிக்கை தஞ்சை தெற்கு மாவட்ட அயலக அணியின் அமைப்பாளர் ஷாஜஹான் முன்னெடுக்கப்பட்டது.

அதன்பின் தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணாதுரை எம்.எல்.ஏ., தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி முயற்சியால், அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழிகாட்டுதல்களின்படி தமிழ்நாடு அரசின் அயலக தமிழர் நலவாரியம் மூலமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

அதன்பின் மலேசியாவில் மருத்துவமனைக்கு செலுத்தவேண்டிய பணம் மற்றும் அங்கிருந்து திருச்சி பன்னாட்டு விமான நிலையம் வரை கார்கோ மற்றும் விமான நிலையத்திலிருந்து முத்துபேட்டை அவர்களின் வீடு வரை ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்து செலவுகள் அனைத்தும், தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசின் தலைமகன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்பான திட்டத்தால் தொடங்கப்பட்ட தமிழ்நாடு அரசின் அயலக தமிழர் நலவாரியம் ஏற்றுக்கொண்டு அந்த தொகை அனைத்தும் செலுத்தப்பட்டது.

அதன்பின் பாலமுருகனின் பூதஉடல் 03.09.2024 அன்று இரவு 10.00 மணிக்கு திருச்சி பன்னாட்டு விமான நிலையத்திற்கு வந்தடைந்தது. அதனை குடும்பத்தார்கள் மற்றும் உறவினர்கள் பெற்றுக்கொண்டார்கள். பின்னர் விமான நிலையத்திலிருந்து ஆம்புலன்ஸில் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துபேட்டையில் அவரது வீட்டுக்கு 04.09.2024 காலை 6.45 அளவில் கொண்டு வரப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினரும், தஞ்சை தெற்கு மாவட்ட கழக செயலாளர் கா.அண்ணாதுரை, தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, பொதுக்குழு உறுப்பினர் அ.மு.ரூசுவெல்ட், மாவட்ட துணைச்செயலாளர் ஆர்.பி. ரமேஷ், திருத்துறை பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, தஞ்சை தெற்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளர் சே. ஷாஜஹான், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சி.கோவிந்தராஜ், துவரங்குறிச்சி ஊராட்சி மன்றத் தலைவர் மல்லிகா சீனிவாசன், திருவாரூர் மாவட்ட துணைச் செயலாளரும், முத்துப்பேட்டை நகரக் கழக செயலாளருமான எம்.எஸ்.கார்த்திக், கந்தசாமி மற்றும் கழகத்தோழர்கள் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

ஒரு சாமானிய குடும்பத்தில் இருந்து வெளிநாட்டில் இறந்த ஒருவரின் உடலை தமிழ்நாட்டிற்கு கொண்டு வர பேருதவி புரிந்த கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கும், கழக மாநில அயலக அணி செயலாளர் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லாவுக்கும், தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலிக்கும், தஞ்சை தெற்கு மாவட்ட கழக செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. க்கும், மலேசியா அயலக அணி பொறுப்பாளர் பெர்தெளஸ்க்கும் பொதுமக்கள் தங்கள் நெஞ்சார்ந்த நன்றியினை உணர்ச்சி பெருக்கோடு தெரிவித்து கொண்டார்கள்.

### மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி,- பி.எம். ஆனந்த் பங்கேற்பு!

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி நேர்காணல்!

## மாவட்ட அமைப்பாளர் க.செந்தில்குமார் அறிக்கை!

தஞ்சை, செப்.10 - தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட மாநகர பகுதி, ஒன்றியம் மற்றும் பேரூர் பகுதிகளுக்கு மாணவர் அணி நேர்காணல் நடைபெற உள்ளதாக மாவட்ட அமைப்பாளர் க.செந்தில்குமார் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின் படி மாநில இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின், மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ ஆகியோரின் வழிகாட்டுதல் படி இன்று (10.09.2024) காலை 10.00 மணியளவில் கும்பகோணம், சஹாஜி தெரு, தஞ்சை வடக்கு மாவட்டக் கழக அலுவகத்தில் நமது மாவட்டத்திற்குட்பட்ட கும்பகோணம் பாபநாசம் திருவிடை மருதூர் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில்உள்ள மாநகர பகுதி. ஒன்றிய.பேரூர் மாணவரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்பிற்கு விண்ணப்பித்த அனைவருக்கும் 10.09.2024 செவ்வாய் கிழமை காலை 09 மணிக்கு தஞ்சை வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி தலைமையில் கழக மாநில மாணவரணி துணை செயலாளர் பி.எம். ஆனந்த் தலைமையில் நேர்காணல் நடைபெற இருப்பதால் அனைவரும் குறித்த நேரத்தில் வருகை புரிய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன் .

குறிப்பு.. விண்ணபத்துதுடன் கல்விச் சான்றிதழ், வயது, முகவரி, ஆவணங்கள் நகல் எடுத்து வரவும்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் க.செந்தில்குமார் அறிக்கை விடுத்துள்ளார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதி, கந்தர்வக்கோட்டை வடக்கு, தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர்கள் எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா ஆகியோர் வரவேற்பில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி தலைமையில், மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் சிறப்புரையில் கந்தர்வகோட்டை ஏ.ஐ.டி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாநில இலக்கிய அணி துணைத் தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மாநில மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, மாவட்ட பொருளாளரும் புதுக்கோட்டை துணை மேயருமான எம்.லியாகத் அலி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு. சண்முகம், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் எம்.ராஜா, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தவசுமணி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மு.கலைஞர் கருணாநிதி, ஒன்றிய அவைத் தலைவர்கள் சுப்பிரமணியன், சண்முகம் மற்றும் எஸ்.ஆர்.கலையரசன், சொ.தமிழினியன், எழில் ராஜா மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக பொது உறுப்பினர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

### தஞ்சை தெற்கு மாவட்டம்,

# அதிராம்பட்டினம் மேற்கு நகர தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. சிறப்புரை! என்.அசோக்குமார் எம்.எல்.ஏ. முன்னிலை!

தஞ்சாவூர், செப். 10 - தஞ்சாவூர் தெற்கு மாவட்டம், அதிராம்பட்டினம் மேற்கு நகர தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் இந்தியாவின் 2வது பொருளாதார மண்டலமாக தமிழ்நாட்டு திகழ பாடுபடும் கழகத் தலைவருக்கு நன்றியையும், வாழ்த்துகளையும், பார்முலா 4 கார் பந்தயத்தை சென்னையில் நடத்தி உலகையே தமிழகத்தை திரும்பி பார்க்க வைத்த கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் அதிராம்பட்டினம் மேற்கு நகர கழக பொறுப்பாளர் எஸ்.ஹெச்.. அஸ்லம் வரவேற்புரையாற்றினார்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் என்.அசோக்குமார் எம்.எல்.ஏ., பழஞ்சூர் கே.செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆர். பி.ரமேஷ், பொன்.சத்தியமூர்த்தி, ஞா.மைக்கேலம்மாள், பொதுக்குழு உறுப்பினர்கள் அப்துல் மஜீத், உமர் தம்பி பாட்சா மரைக்காயர், பொறுப்புக்குழு உறுப்பினர்கள் என்.ஏ.முகம்மது யூசுப், எம்.சேக்தாவுது, எஸ். ரிபாயா மற்றும் மாவட்டக் பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.

தீர்மானம் 1:

அதிராம்பட்டினம் நகர கழகத்தின் நிர்வாக வசதிக்காகவும், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும், அதிராம்பட்டினம் நகர கழகத்தை மேற்கு1, மற்றும் கிழக்கு2 என 2 கழகங்களாக பிரித்து அறிவித்த மாநில தலைவர் தளபதி அவர்களுக்கும், அதிராம்பட்டினம் 2 நகர கழகங்களாக பிரிப்பதற்கு பரிந்துரை செய்து உறுதுணையாக இருந்த மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரைக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் 2:

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் பயனடையும் வகையில் வழங்கிய திட்டங்களை தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் எடுத்துரைத்து நடைபெற்ற 18வது நாடாளுமன்றத் தேர்தலில் 40 நாடாளுமன்றத் தொகுதிகளையும் கைப்பற்றி 100 சதவிகித வெற்றி வாகை சூட பாடுபட்ட முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்களுக்கும், மாநில இளைஞர் அணிச் செயலாளர், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியுடன் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் 3:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அமெரிக்கா சென்று, முதலீட்டாலர்களை சந்தித்து, தமிழ்நாட்டை இந்தியாவின் 2வது பொருளாதார மாநிலமாகத் திகழ முதலீடுகளை ஈர்க்க காரணமாக இருந்து வரும் கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு நன்றியையும், பாராட்டுகளையும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் 4:

தஞ்சை நாடாளுமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட ச.முரசொலி அவர்களை பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றிப்பெற பாடுபட்ட தஞ்சை தெற்கு மாவட்டப் பொறுப்பு அமைச்சரும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சருமான திரு: அன்பில் மகேஷ் அன்பில் பொய்யாமொழி அவர்களுக்கும், தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளரும், பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினரான கா. அண்ணாதுரைக்கும் நன்றியுடன் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் 5:

வரும் 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. 200 இடங்களை பிடிக்க கட்சியின் தலைவரும், முதல்வருமான மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்கள். இதனடிப்படையில் தஞ்சை தெற்கு மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. வெற்றி பெறுவதற்கான வியூகம் அமைத்து, தி.மு.க.வின் வெற்றிக்கு அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றுவது என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் 6:

வரும் செப்டம்பர் 17ல் சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் அதிராம்பட்டினம் மேற்கு நகர சார்பில் திராளானோர் சென்று பங்கேற்பது என்றும், கழகத் தலைவர் தளபதியார் சாதனை திட்டங்களை விளக்குமுக மாக நகரில் சுவர் விளம்பரம் செய்வது என்றும், கழகத்தின் முப்பேரும் விழாவை முன்னிட்டு நகரில் உள்ள அனைத்து கழக கொடி கம்பங்களை புதுப்பித்து கொடி ஏற்றுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் 7:

2021ம் ஆண்டு சேப்பாக்கம், திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்று, அதனை தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக பணியாற்றியும், நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு 40க்கு 40 தொகுதிகளில் வெற்றி பெற உறுதுணையாக இருந்த மாநில இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை, தமிழக முதல்வருக்கு உறுதுணையாக பணியாற்றிட துணை முதல்வராக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் 8:

அதிராம்பட்டினம் மேற்கு நகர கழகத்தில் சார்பில் நகர கழக சார்பு அணிகளுக்கான பொறுப்பாளர்களை ஒருவார காலத்திற்குள் நியமனம் செய்த பட்டியலை மாவட்ட தலைமை அலுவலகத்திற்கு அனுப்புவது என தீர்மானிக்கப்பட்டது.

**இரங்கல் தீர்மானம்:**

அதிராம்பட்டினம் காதர் முகைதீன் ஆண்கள் மேல்நிலை பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வந்த, நரசிங்கபுரத்தை சேர்ந்த சரவணன் என்பவரின் மகன் 13 வயதுடைய தருண் குமார் விபத்தில் மூளைச்சாவு அடைந்த மாணவனின் உடல் உறுப்புகள் தானமாக வழங்கி அரசு சார்பில் இறுதி மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்ட மாணவனுக்கு இரங்கல் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




தர்மபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் மேற்கு ஒன்றிய தி.மு.க. உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் ஜெ.பந்தார அள்ளி பகுதியில் இருந்து 25க்கும் மேற்பட்டோர் பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி மேற்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் தருமபுரி எம்.பி.ஆ.மணி, ஒன்றிய கழகச் செயலாளர் எம்.வீ.டி.கோபால் ஆகியோர் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் மாவட்டப் பொருளாளர் முருகன் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**போளூர் கே. கோவிந்தசாமி**

**செப்டம்பர் 10 (2011)**



**திருவண்ணாமலை மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவரான இவர், 1970 முதல் 1980 வரை பத்தாண்டுகள் போளூர் பேரூர்க் கழகச் செயலாளராகவும், 1977 முதல் 2011 வரையிலான 34 ஆண்டுகள் பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**